2006 ஜனவரி 25] [பேரவைத் தலைவர்]

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

27-01-2006 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் 27-01-2006 ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-26 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

51. கன்னியாகுமரியில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குவதற்காக சென்னையில் உள்ள திருவாளர்கள் ஜெர்மன் தொழுநோய் மற்றும் காசநோய் நிவாரண சங்கத்திற்கு திருநெல்வேலியிலுள்ள தினேஷ் எண்டர்பிரைசஸ் நிறுவனம் விற்பனை செய்துள்ள மேசை மின் விசிறிகளின் மீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்து வணிக வரித் துறையின் 2-8-2005 ஆம் நாளிட்ட 88 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

52. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து வணிக வரித் துறையின் 6-9-2005 ஆம் நாளிட்ட 95 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

53. மோட்டார் வாகனங்களுக்குரிய திரவ பெட்ரோலிய வாயு மாற்றுக் கருவிகளின் விற்பனை மீது செலுத்தத்தக்க வரி வீதத்தை நான்கு சதவீதமாகக் குறைத்து வணிக வரித் துறையின் 19-10-2005 ஆம் நாளிட்ட 110 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

54. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் நாற்பதாவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் *1/1956*) *619*–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

55. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சரிகை நிறுவனத்தின் முப்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் *1/1956*) *619*–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

56. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் *1/1956*) *619*–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

57. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் பதினைந்தாவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் *1/1956*) *619*–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

58. தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் *2004–2005* ஆம் ஆண்டின் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. [*1995* ஆம் ஆண்டு கடல்சார் வாரியச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் *4/1996*) *89 (2)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

57. மதிப்பீட்டுக் குழுவின் முப்பத்து மூன்றாவது அறிக்கை. *(2003–2006)*

58. மதிப்பீட்டுக் குழுவின் முப்பத்து நான்காவது அறிக்கை. *(2003–2006)*

59. மதிப்பீட்டுக் குழுவின் முப்பத்து ஐந்தாவது அறிக்கை. *(2003–2006)*

60. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று தொண்ணூறாவது அறிக்கை. *(2003–2006)*

61. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று தொண்ணூற்று ஒன்றாவது அறிக்கை. *(2003–2006)*

TRUTH ALONE TRIUMPHS